சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 17.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 24/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | சுதாகர் |
| தந்தை பெயர் | : | அஞ்சான் |
| கிராமம் | : | மலையூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 42 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதரிகள் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பள்ளன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். எதிரிகளை தெரியும். அவர்கள் உடையார் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். அ.சா-1 சூரியா-வை தெரியும். கடந்த 19.05.2020 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு நானும், அய்யாகண்ணு மகன் குமாரும் மலையூரில் உள்ள குடியான தெருவிற்கு வேலைக்கு சென்றோம். அப்போது 1ம் எதிரி நடராஜன் வீட்டின் அருகே கொரடாச்சேரி காவல் துறை போலீசாரும், காவல் துணை கண்காணிப்பாளரும் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அருகே இருந்த வீடுகள் பற்றி போலீசார் விசாரித்தார்கள். நான் அ.சா-3 தனபால் வீடு, பட்டாமணியார் வீடு என்று சொன்னேன்.

போலீசார் அங்கு அந்த இடங்களை பற்றி படம் ஒன்று வரைந்தனர். பின்னர் ஒரு தாளில் எழுதிக்கொண்டு கையொப்பம் கேட்டார்கள். நானும் அய்யாகண்ணு மகன் குமாரும் கையொப்பம் போட்டுக் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

19.05.2025 என்று முதல் விசாரணையில் தேதி சொன்னேன் அது என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. யார் படம் வரைந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. நான் சொல்லுகிற தேதியில் சொல்லுகிற நேரத்தில் காவல் துறையினர் அவர்கள் படம் வரைந்து மகஜர் தயார் செய்து கையெழுத்து எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா-1 சூரியா எனது நண்பர் என்பதால் தவறாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.17 17:33:59 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.